## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 132/2014 | Date : 20.03.2024 | DW4 |
|---|---|---|
| Name: மனோகரன் | S/o. **வெங்கடாஜலம்** | |
| Evidence Recorded Time: 12.15 P.M. to 12.20 P.M | | |

**4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார்கள் என்றால் பொன்னுசாமி அழைத்து வந்தார். 25.03.2011 ம் தேதி கோசலையிடம் அக்ரிமெண்ட் யார் போட்டார்கள் என்றால் பொன்னுசாமி போட்டார். மேற்படி அக்ரிமெண்ட் சமயத்தில் யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் பொன்னுசாமி, கோசலை, நல்லதம்பி ஆகியோர்இருந்தார்கள். அப்பு முன்னிலையில் தான் பட்டா, பத்திரம் ஆகியவற்றை நோட்டரி வழக்கறிஞரிடம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி அக்ரிமெண்ட் பிறகு 6 மாதம் கழித்து கிரையம் செய்து கொண்டார்கள். கிரையம் செய்யும் போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். பாபு என்பவர் பக்கத்து வீட்டுக்காரர். அக்ரிமெண்ட் விவரம் சரியாக இருந்ததால் தான் பத்திரம் பதிவு செய்ப்பட்டது என்றால் சரிதான். அப்பு மற்றும் பாபு ஆகியோர் பேசினார்கள் என்றும் அவர்கள் பத்திரத்தை படித்து பார்த்தார்களா என்றால் பேசிக் கொண்டிருந்தார்கள். படித்தார்களா என்று தெரியாது.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். இன்றைக்கு பொன்னுசாமி, நல்லதம்பி, சசிகுமார் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால் வரவில்லை. மேற்படி 3 பேரும்இன்று வரைவில்லை எதன் அடிப்படையில் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன் என்றால் சென்ற வாய்தாவிற்கு வந்தேன். அடுத்த வாய்தாவிற்கு வரசொன்னதால் வந்தேன். யார் யார் வழக்கு போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கோசலை வழக்கு போட்டதது தான் தெரியும். யார் யார் எல்லாம் சேர்ந்து வழக்கு போட்டார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. கோசலை யார் யார் மீது வழக்கு போட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு கோசலை வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் பிரமாண பத்திரிகையில் 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி என்றும் அவர்கள் யார் என்பது தெரியுமா என்றால் தெரியும். நல்லதம்பி, சசிகுமார், பொன்னுசாமி ஆகியோர் மீது கோசலை வழக்கு போட்டுள்ளார். அந்த வழக்கில் தான் நான் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். என் பிரமாண பத்திரிகையில் அப்பு வகையறா என்று சொல்லியுள்ளேன் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது அப்பு மட்டும் தான் தெரியும். வகையறா தெரியாது.

கோசலை வழக்கு போட்டதாக சொல்லியுள்ளேன் எந்த ச.எண். எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் தெரியாது. நிலம் ஆரம்பத்தில் கோசலைக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியும். அப்பு என்பவர் கோசலைக்கு எழுதிக் கொடுத்தாக தெரிந்து கொண்டேன். அப்பு கிரையம் செய்து கொடுத்தாரா அல்லது தானமாக கொடுத்தாரா என்பது தெரியாது. அப்பு கோசலைக்கு என்ன உறவு என்றால் சகோதரர் ஆவார். கோசலை நிலம் விற்றதாக என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். எப்போது சொன்னார் என்றால் வருடம் நினைவில்லை. அப்பு கோசலைக்கு என்ன காரணத்திற்கு நிலம் கொடுத்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. சொத்துவிற்பதாக என்னிடம் மட்டும் தான் சொன்னார் வேறு யாரிடம் சொன்னார் என்பது தெரியாது. சொத்து விற்பதாக சொல்லும் போது அப்பு கேட்டபோது நானும் அருகில் இருந்ததாக சொல்லியுள்ளேன் மாதம், வருடம் தெரியுமா என்றால் தெரியாது. கோசலையிடம் உடன்படிக்கை போட்ட தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் 2011 என நினைக்கிறேன். வருடம் சரியாக நினைவில்லை. மேற்படி உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்படவில்லை. நோட்டரி மூலமாக எழுதினார்கள். அது எழுதப்பட்ட மாதம், வருடம் தெரியுமா என்றால் தெரியாது.ள அந்த உடன்படிக்கை ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அது எத்தனை ரூபாய் பத்திரம் என்றால் தெரியாது . அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். அப்பு என்பவரும் அதில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளா◌ர்ா என்றால் நினைவில்லை. உடன் படிக்கை யார் யார் எழுதிக் கொண்டார்கள் என்றால் கோசலையும், நல்லதம்பியும் எழுதிக் கொண்டார்கள். மேற்படி உடன்படிக்கையில் எவ்வளவு தொகை பேசப்பட்டது, அட்வான்ஸ் எவ்வளவு கொடுக்கப்பட்டது, எவ்வளவு நாளில் நிலம் கிரையம் செய்யப்பட்டது போன்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உடன்படிக்கையில் எந்த கிராமம், ச.எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் ச.எண் தெரியாது. கிராமம் சிங்கிரிபட்டி கிராமம். மற்றபடி எதுவும் தெரியாது. கிரையம் செய்த மாதம், வருடம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். கிரைய பத்திரத்தில் நான்சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன். என் அப்பா பெயர் வெங்கடாஜலம். மேற்படி கிரைய பத்திரத்தை யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் கோசலை, நல்லதம்பி எழுதி கொடுத்தார்கள். பத்திரத்தை எனக்கு படித்து காட்டினார்களா என்றால் படித்து காட்டினார்கள். கிரையம் செய்யும் போது சொத்தின் பட்டா, மூல ஆவணம் ஆகியவற்றை நல்லதம்பியிடம் கோசலை கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். கோசலைக்கு மேற்படி சொத்து உயில் மூலமாக பாத்தியப்பட்டது என்ற வ.சா.ஆ.3 ல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலையும் கிரையததின் போது கோசலை நல்லதம்பியிடம் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. கிரைய பத்திரம் எழுதும் போது நான் இல்லாததால் என்ன ஆவணம் கொடுத்தார்கள்

என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நல்லதம்பி எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிரையம் செய்யும் போது யார் யார் இருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் நான் போட்டேன் கோசலையின் கணவர் போட்டார் வேறு யார் போட்ார்கள் என்றால் தெரியாது. அப்பு கிரைய பத்திரத்தில் கையொப்பம செய்தாரா என்றால் இல்லை. உன்படிக்கை ஆவணத்தையும் கோசலை நல்லதம்பிக்கு கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது. மோசடியாக கோசலை என்பவர் பதிவு செய்யப்பட்ட உயிலை திருத்தி மோசடி செய்து நல்லதம்பிக்கு விற்றார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கோசலை வகையறாவிற்கு நடந்த முழு விவரமும் தெரியாமல் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சியத்திற்கு நான் தான் தகவல் சொன்னேன்.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/– DW4

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.